

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | பிப்ரவரி 14, 2019 | புரட்சி 18 | முழக்கம் 05 | விலை: ரூ.3.00


# ஆளுநர் அலட்சியத்துக்கு எதிர்ப்பு வலுக்கிறது

# 7 பேர் விடுதலை: அடுத்தக் கட்ட நகர்வுகள் என்ன?

***7 தமிழர் விடுதலையை வலியுறுத்தி தமிழ்நாடு திராவிடர் கழகம் நடத்திய மக்கள் சந்திப்பு இயக்கத்தில் ஆளுநர் அலட்சியத்துக்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. அடுத்தக் கட்ட நகர்வுகள் குறித்து சென்னையில் நடந்த பொதுக் கூட்டத்தில் ஆலோசனைகள் முன் வைக்கப்பட்டன.***

7 தமிழர் விடுதலையை வலியுறுத்தி கா.சு. நாகராசன் தலைமையில் தமிழ்நாடு திராவிடர்கழகம் நீதி கேட்கும் மக்கள் சந்திப்பு இயக்கத்தை பொள்ளாச்சியில் பிப்.3 ஆம் தேதி தொடங்கியது. திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தொடங்கி வைத்தார். 8ஆம் தேதி இந்த இயக்கம் புதுவையில் நிறைவடைந்தது. 15 தமிழ்நாடு திராவிடர் கழகத் தோழர்கள் இதில் பங்கேற்றனர். ஈரோடு, மேட்டூர், சேலம், தர்மபுரி, ஓசூர், கிருஷ்ணகிரி, வேலூர், காஞ்சி, சென்னையில் பூந்தமல்லி, சைதாப் பேட்டை, தேனாம்பேட்டை ஆகிய பகுதிகளில் தெருமுனைக் கூட்டங்கள் வழியாக ஏழு தமிழர் விடுதலையை வலியுறுத்தி மக்களை சந்தித்தது இந்தக் குழு. 7 ஆம் தேதி மாலை சென்னை இராயப்பேட்டை வி.எம். தெருவில் பயணக் குழுவினரை வரவேற்கும் பொதுக் கூட்டத்தை திராவிடர் விடுதலைக் கழகம் ஏற்பாடு செய்திருந்தது.

கூட்டத்துக்கு சு. பிரகாசு தலைமை தாங்கினார். நாத்திகனின் சம்பூகன் கலைக் குழுவினரின் இசை நிகழ்ச்சியோடு கூட்டம் தொடங்கியது. மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திரு. முருகன் காந்தி, தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகரன், தமிழக மக்கள் முன்னணித் தலைவர் பொழிலன் ஆகியோர் உரையாற்றினர். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நிறைவுரையாற்றினார். அவர் தம் உரையில் குறிப்பிட்டதாவது:

இந்தியாவில் எந்த ஒரு வழக்கும் சந்திக்காத தடைகளையும் சட்ட மீறல்கள் முறைகேடுகளையும் சந்தித்த வழக்கு இது. மத்தியில் எதிர் துருவங்களான காங்கிரஸ் ஆட்சியிலிருந்தபோதும் சரி, பா.ஜ.க. ஆட்சியிலிருந்தபோதும் சரி இந்த வழக்கில் மட்டும் கைகோர்த்து நின்றன என்றால் அதற்கு ஒரே காரணம், இந்த வழக்கை பார்ப்பனக் கண்ணோட்டத்தோடு இரு ஆட்சிகளுமே பார்த்ததுதான். இந்த வழக்கில் 7 தமிழர்களுக்கு நியாயம் கிடைத்துவிடக் கூடாது என்பதில் ஆளும் பார்ப்பன அதிகார வர்க்கம் உறுதியுடன் செயல்பட்டது. தமிழ்நாட்டில் பெரியார் உருவாக்கிய பார்ப்பனரல்லாத தமிழின உணர்வுக்கு இந்த விடுதலை வலிமை சேர்த்துவிடும் என்று பார்ப்பன அதிகார வர்க்கம் அஞ்சி, அ தன் முழு செல்வாக்கையும் பயன்படுத்தி இன்று வரை விடுதலையைத் தடுத்து வருகிறது.

26 பேருக்கு தூக்குத் தண்டனை விதித்தது தடா நீதி மன்றம். உச்சநீதிமன்றம் நான்கு பேருக்கு மட்டும் தூக்குத் தண்டனையை உறுதி செய்தது. 3 பேர் ஆயுள் தண்டனை பெற்றனர். ஏனையோர் விடுதலை யானார்கள். தூக்குத் தண்டனைக்குள்ளானவர்களின் கருணை மனுக்கள் குடியரசுத் தலைவர் மாளிகையில் 11 ஆண்டுகள் கிடப்பில் போடப்பட்டன. 5 ஆண்டுகள் கிடப்பில் போடப்பட்டாலே தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றிட வேண்டும் என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்புகளை மீறி தூக்குத் தண்டனைக்கு நாள் குறிக்கப்பட்டது. 2013ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் தமிழகத்தில் உருவான பேரெழுச்சி காரணமாக கடந்தகால தீர்ப்புகளின் பக்கங்களைப் புரட்டிப் பார்த்து ஆயுள் தண்டனையாகக் குறைத்தது. மாநில அரசு விரும்பினால் விடுதலை செய்யலாம் என்றும் பரிந்துரைத்தது. தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா, அமைச்சரவையைக் கூட்டி, 7 பேரை விடுதலை செய்ய முடிவு செய்தார். மத்திய அரசைக் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்று சட்டம் கூறியதால் நடுவண் ஆட்சிக்கு 3 நாளில் பதில் தருமாறு கடிதம் எழுதினார். நடுவண் காங்கிரஸ் ஆட்சி, மாநில அரசு கோரிக்கையை அவமதித்து,




பயணக் குழுவினர்

நேரடியாக உச்சநீதிமன்றத்தில் விடுதலையை எதிர்த்து வழக்கு தொடர்ந்து விடுதலைக்கு தடை வாங்கியது. வழக்கு மீண்டும் கிடப்பில் போடப் பட்டது. இதற்கிடையே இரண்டு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிகள் பதவிக்கு வந்து வழக்கை விசாரணைக்கு ஏற்காமல் இழுத்தடித்தனர். 5 நீதிபதிகள் அடங்கிய அமர்வு விடுதலை செய்யும் அதிகாரம் மத்திய அரசுக்கா மாநில அரசுக்கா என்ற குழப்பத்துக்கு தெளிவான வழி காட்டவில்லை. மீண்டும் 3 நீதிபதிகளடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கில் தண்டனைக் குறைப்புக்கு மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என்று உச்சநீதிமன்ற அமர்வு கூறிவிட்டது. ஆனால் மாநில அமைச்சரவை ஆளுநரிடம் பரிந்துரைத்து தண்டனைக் குறைப்பு வழங்கலாம் என்ற அரசியல் சட்ட உரிமையை உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் ஏற்றுக் கொண்டன. அதே நேரத்தில் மாநில அரசுக்கு தண்டனைக் குறைப்பு வழங்கும் 161ஆவது பிரிவை இந்த குறிப்பிட்ட வழக்கில் பயன்படுத்த முடியுமா என்ற சட்டச் சிக்கல்கள் உருவாக்கப்பட்டன.

இதற்கிடையே தகவல் தொடர்புச் சட்டம் வழங்கியுள்ள உரிமையைப் பயன்படுததி சிறைக் குள்ளிருந்து கொண்டே பேரறிவாளன் இந்த வழக்கில் நடக்கும் முறைகேடுகளை வெளிச்சத் துக்குக் கொண்டு வந்து சட்டப் போராட்டத்தின் வழியாக வழக்கை முன் நகர்த்தினார். தண்டனைக் குறைப்பு கேட்டு குடியரசுத் தலைவருக்கு பேரறிவாளன் செய்த மனுவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பாமலே, உள்துறை உச்சநீதி மன்றத்துக்கு தவறாக தகவல் தந்தது என்ற உண்மை அம்பலமானது. குடியரசுத் தலைவர் மனுவை நிராகரித்து விட்டார் என்று உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு தவறான தகவலை அறிவித்தது.


2010 முதல் 2015 வரை இந்தியா முழுவதும் சிறை வாசிகள் தண்டனைக் குறைப்புக்கு பின்பற்றப்பட்ட நெறிமுறைகள் என்ன என்று பேரறிவாளன் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் கேட்டபோது, நீதிமன்றத்திலுள்ள வழக்குகள் குறித்து தகவல் அறியும் சட்டத்தில் தகவலைத் தர முடியாது என்று பதில் வந்தது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் அப்படி எந்தப் பிரிவும் இல்லை என்று பேரறிவாளன் மீண்டும் மனு செய்தார். வேறு வழியில்லாமல் தகவல் ஆணையர் தகவலைத் தர உத்தரவிட்டார். அதற்குப் பிறகு உள்துறை அமைச்சகம் 5 ஆண்டுகளில் தண்டனைக் குறைப்பு பெற்றவர் பட்டியலை வெளியிட்டது. தண்டனைக் குறைப்புக்கு ஒரே மாதிரியான விதிமுறைகள் ஏதும் பின்பற்றப்பட வில்லை என்ற உண்மையும் வெளியே வந்தது. மாநில ஆளுநருக்கு தண்டனைக் குறைப்புக் கேட்டு தாம் விண்ணப்பித்த மனுவில் விரைந்து முடிவெடுக்கக் கோரி மீண்டும் உச்சநீதிமன்றம் போனார் பேரறிவாளன். இதில் 164ஆவது பிரிவின் கீழ் ஆளுநருக்கு முடிவெடுக்க உரிமை உண்டு என்று கூறியது உச்சநீதிமன்றம். உடனே தமிழக அமைச்சரவை கூடி 7 பேர் விடுதலையை ஆளுநருக்கு பரிந்துரைத்தது. மாதங்கள் பல உருண்டோடி விட்டன. தமிழக அமைச்சரவையின் பரிந்துரையை கிடப்பில் போட்டு விட்டார் ஆளுநர். தமிழக ஆளுநருக்கு இப்போது ஒரு கோரிக்கையை வைக்கிறோம். விடுதலை செய்யலாம் என்று ஒப்புதல் வழங்குவது, உங்களது சட்ட ரீதியான கடமை; அப்படி முடியாது என்றால், மனுவை நிராகரித்து திருப்பு அனுப்புங்கள். அப்போது மீண்டும் அமைச்சரவையை கூட்டி விடுதலை செய்ய வேண்டும் என்று அமைச்சரவை தீர்மானித்தால் அப்போதே


4ஆம் பக்கம்



## வெளி வந்து விட்டது

## ‘கருஞ்சட்டைக் கலைஞர்’




திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி திருச்செங்கோட்டில் நிகழ்த்திய கலைஞர் குறித்த விரிவான உரை நூல் வடிவம் பெற்றுள்ளது.

விலை : ரூ.30

தொடர்புக்கு : 9841489896 / 044–24980745

## நீட் : ஒரு தீண்டாமைத் தேர்வு

வர்க்க பார்வையில் பார்த்தாலும் சரி , வருண பேத பார்வையில் பார்த்தாலும் சரி “நீட் தேர்வு “ ஒரு தீண்டாமைத் தேர்வு .

தரவுகளின் அடிப்படையாயினும் நியாயத்தின் அடிப்படையாயினும் ஒடுக்கப்பட்ட மக்கள், நடுத்தர வர்க்க மாணவர்களின் கனவுகளை நீட் தேர்வு கலைத்து விட்டது .

ஆண்டுக்கு இலட்சங்களில் புழங்கும் பெற்றோர்களின் பிள்ளைகளுக்கே நீட் தேர்வில் தேர்ச்சி பெற முடியும் என்று சொன்னப்போது மருத்துவத் துறைக்கு தகுதி வேணாமா பொடலங்கா வேணாமா என்று கேட்ட வஞ்சகர்களுக்கு இதோ சில தகவல்கள்:

ஏழை மக்களை மட்டும் நீட் தேர்வு பாதிக்க வில்லை நடுத்தர வர்க்கத்தின் பிள்ளைகளையும் பாதித்துள்ளது. இரண்டு ஆண்டு நீட் தேர்வுக்கு தயாரான வர்களும், CBSE பாடத்திட்டத்தில் படித்தவர்கள் மட்டுமே தேர்ச்சி பெற்றுள்ளனர்.

அரசு மருத்துவ கல்லூரியில் 2018-19 ஆம் கல்வி ஆண்டில் மருத்துவப் படிப்பில் இடம் கிடைத்தவர்களில் 2017-18 இல் பள்ளி படிப்பை முடித்தவர்கள் - 1277.

தனியார் மருத்துவ கல்லூரியில் 2018-19 ஆம் கல்வி ஆண்டில் மருத்துவப்படிப்பில் இடம் கிடைத்தவர்களில் 2017-18 இல் பள்ளி படிப்பை முடித்தவர்கள் - 557

மொத்தம் (1277 + 557 ) = 1834

இரண்டு ஆண்டு காத்திருந்து படித்து நீட் தேர்வில் வெற்றி பெறுவது தான் தகுதியா?

இது தமிழகத்திற்கான பிரச்சனையா? அல்லது இந்தியாவின் பிரச்சனையா? இந்தியா முழுக்க நீட் தேர்வால் அனிதாக்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

2014 முதல் 2017 வரை நீட் வருவதற்கு முன்னர் CBSE மாணவர்களின் மொத்த தேர்ச்சி எண்ணிக்கை :

அரசாங்க மருத்துவக் கல்லூரிகளில் = 14

தனியார் மருத்துவக் கல்லூரிகளில் : 2+ 2 + 21 = 25

மொத்தம் - 39

ஆக நீட் கோச்சிங் என்னும் ஸ்பெஷல் கோச்சிங் இல்லாமலும் CBSE பாட திட்டத்தில் படித்து தமிழ் நாட்டில் உள்ள மருத்துவ கல்லூரியில் கிடைத்த மொத்த இடம் 39.

2017-2018 இல் மட்டும் CBSE பாடத் திட்டத்தில் படித்து கூடுதலாக நீட் கோச்சிங் மருத்துவ கல்லூரியில் சேர்ந்த மாணவர்கள் எண்ணிக்கை : (நீட் தேர்வுக்குப் பிறகு)

அரசு மருத்துவக் கல்லூரிகளில் = 611

தனியார் மருத்துவக் கல்லூரிகளில் = 283

தனியார் மருத்துவ கல்லூரியில் தனியார் பள்ளியில் படித்த மாணவர்களின் எண்ணிக்கை : (நீட் தேர்வுக்கு முன்)

2014 -2015 : 798

2015 -2016 : 657

2016-2017 : 1173

நீட் தேர்வுக்குப் பிறகு

2017-2018 : 03 (பெரும் சரிவு)

அரசாங்க மருத்துவ கல்லூரியில் தனியார் பள்ளியில் படித்த மாணவர்களின் எண்ணிக்கை : : (நீட் தேர்வுக்கு முன்)

2014 -2015 : 2226

2015 -2016 : 2247

2016-2017 : 2321

நீட் தேர்வுக்குப் பிறகு

2017-2018 : 20 (பெரும் சரிவு)

நீட் கோச்சிங் வாய்ப்பு எல்லா மாணவர் களுக்கும் கிடைக்குமா?

ஆக வர்க்க பார்வையில் பார்த்தாலும் சரி, வருண பேத பார்வையில் பார்த்தாலும் சரி “நீட் தேர்வு” ஒரு தீண்டாமைத் தேர்வு, மோசடி தேர்வு.

ஆதாரங்கள் மறுமொழியில்.

# பெங்களூர் வந்த இராஜபக்சேவுக்கு கறுப்புக் கொடி



கைதாகி விடுதலையான தோழர்கள்

9-02-2019 காலை 10 மணி அளவில் ‘இந்திய இலங்கை வெளியுறவு கொள்கையின் எதிர்காலம்’ என்ற தலைப்பிலான இந்துக் குழும நிகழ்வில் கலந்து கொள்ள பெங்களூருக்கு வந்த இனப்படுகொலையாளி மகிந்த ராஜபக்சேவை கண்டித்து ஆர்ப்பாட்டம் பெங்களூர் ப்ரீடம் பார்க் அருகில் நடந்தது.

கருநாடக தமிழர் கூட்டமைப்பு விடுத்த அழைப்பின் பேரில் பல்வேறு அமைப்பின் பிரதிநிதிகள் உள்பட சுமார் 300 பேர் இந்திய சிங்கள இனக்கொலை கூட்டணியை அம்பலப்படுத்தியும் இனக்கொலையாளி இராஜபக்சேவே திரும்பிப் போ என்றும் இனக்கொலைக்கு துணை போகிற இந்துக் குழுமம் ராமை கண்டித்தும் எழுச்சியுடன் முழக்கமிட்டனர்.

திராவிடர் விடுதலைக் கழகம், கருநாடக தமிழர் கட்சி, நாம் தமிழர் கட்சி, கருநாடக தமிழர் பாதுகாப்பு இயக்கம், பாசிச எதிர்ப்பு கூட்டமைப்பு, கருநாடக தமிழர் பேரவை, கன்னட தமிழர் பெடரேசன், கருநாடக தமிழ் மக்கள் இயக்கம், விடுதலை சிறுத்தைகள் கட்சி, தங்க வயல் நாம் தமிழர் கலை இலக்கிய பாசறை, இளந்தமிழகம், மே 17 இயக்கம், ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம், புரட்சிகர இளைஞர் முன்னணி மற்றும் சனநாயக சக்திகள் கலந்து கொண்டனர். பிறகு 50 பேருக்கு மேல் காவல் துறையால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு பிற்பகலில் விடுவிக்கப்பட்டனர்.

திராவிடர் விடுதலைக் கழகம், கருநாடக தமிழ் மக்கள், மே 17 இயக்கம், கருநாடக தமிழர் கட்சி, இளந்தமிழகம், புரட்சிகர இளைஞர் முன்னணி, க.த.மு.க. ஆகிய அமைப்பின் தோழர்கள் கைதாயினர்.

இந்நிகழ்வு இராவணன் தலைமையில் பழனி, சரவணன், சித்தார்த்தன், குமார், தயாளன், வில்லாளன், வடிவேல், இராமர் உள்பட கழகத் தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திருப்பூர் புத்தகத் திருவிழாவில் ‘கருஞ்சட்டைக் கலைஞர்’ நூல் வெளியீடு

திருப்பூர் புத்தக திருவிழா நிமிர்வோம் 35 அரங்கில் கருஞ்சட்டை கலைஞர் புத்தக வெளியீடு புலவர் செந்தலை கவுதமன் அவர்கள் வெளி யிட்டார். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க செயலாளர் தோழர் ஈஸ்வரன் முதல் படியை பெற்றுக்கொண்டார்



உடன் கவிநிலா பதிப்பகம் தோழர் பாரதி வாசன், கவிஞர் து சோ பிரபாகர், தாய் தமிழ் பள்ளி தாளாளர் எழில், சூலூர் பன்னீர்செல்வம், தமிழ் பண்பாட்டு மய்யம் தோழர் யோகி செந்தில், சேரன் வரைகலை தோழர் ஆனந் ஆகியோர் நிகழ்வை சிறப்பித்தனர்

தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் தோழர் சிவகாமி நிகழ்ச்சியை தொகுத்து வழங்க மாவட்ட தலைவர் முகில்ராசு வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட அமைப்பாளர் சங்கீதா மற்றும் மாவட்ட அமைப்பாளர் தோழர் மாதவன் மற்றும் தோழர் தனபால் உடனிருந்தனர்

செய்தி : விஜய்குமார்

## நாகர் கோயிலில் ஜாதிப் பெயர்களை நீக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

சாலை மற்றும் வீதிகளிலும் அரசுஅலுவலகங்களிலும் சாதிப் பெயர்களை அகற்றக் கோரி தெற்கு எழுத்தாளர் இயக்கம், நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே 28.01.2019 அன்று காலை ஆர்ப்பாட்டம் நடத்தியது. திராவிடர் விடுதலைக் கழகம், குமரி மேற்கு மாவட்டம். சார்பாக தோழர்கள் தமிழ்மதி, நீதிஅரசர் ஆகியோர் கலந்து கொண்டு பெரியாரியல் கருத்துகளை எடுத்துரைத்தனர்.

## விழுப்புரம் மாவட்டம் பிரிப்பு: வரவேற்று கழக சார்பில் சுவரொட்டிகள்

தமிழகத்தில் பெரிய மாவட்டமாக இருந்து வந்தது விழுப்புரம் மாவட்டம். பொதுமக்கள் தங்களது பல்வேறு துறை சார்ந்த வேலைகளுக்காகவும் மாவட்ட ஆட்சியர் சந்திப்பதற்கும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய சூழல் இருந்து வந்தது. இதனால் விழுப்புரம் மாவட்டத்தை இரண்டாக பிரித்து புதியதாக கல்லக்குறிச்சி மாவட்டம் அறிவிக்கும்படி தமிழக அரசுக்கு பொதுமக்களும் கட்சிகளும் இயக்கங்களும் கோரிக்கை வைக்கப்பட்டு வந்தன. இந்த நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று கல்லக்குறிச்சி புதிய மாவட்டமாக அறிவித்த தமிழக அரசை வாழ்த்தி நன்றி தெரிவிக்கும் விதமாக கல்லக்குறிச்சி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக கல்லக்குறிச்சி மாவட்டத்தில் போஸ்ட்டர்கள் ஒட்டப்பட்டன.

## நாகை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக கலந்துரையாடல் கூட்டம்

நாகை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக கலந்துரையாடல் கூட்டம் மயிலாடுதுறையில் 09.01.2019 அன்று காலை 11.00 மணியளவில் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தலைமைக் கழகப் பொறுப்பாளர்கள் ஈரோடு ரத்தினசாமி, திருப்பூர் துரைசாமி, சூலூர் பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தலைமைக் குழு உறுப்பினர் நா. இளையராஜா வரவேற்றார். கழக வார பத்திரிகை புரட்சிப் பெரியார் முழக்கம் மற்றும் மாத இதழ் நிமிர்வோம் சந்தா தலைவரிடம் கொடுக்கப்பட்டது. கீழ்க்கண்ட புதிய நிர்வாகிகளை கழகத் தலைவர் அறிவித்தார்.

மாவட்டத் தலைவர் ம.மகாலிங்கம்; மாவட்ட செயலாளர் தெ.மகேசு; மாவட்ட பொருளாளர் ந.விஜயராகவன்; மாவட்ட அமைப்பாளர் கு.செந்தில் குமார்; மாவட்ட துணைத் தலைவர் தெ. ரமேஷ்; மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் நன்மாறன்

மயிலாடுதுறை நகரம்: நகரத் தலைவர் நாஞ்சில் சங்கர்; நகர செயலாளர் நி.நடராசன்; நகர அமைப்பாளர் தில்லை நாதன்; நகர துணை தலைவர் ராஜராஜன்; நகர துணை செயலாளர் ஜாகிர் உசேன்.

மயிலாடுதுறை ஒன்றியம் - அமைப்பாளர்கள் பீமாராவ், பாலமுருகன்

செம்பனார்கோயில் ஒன்றியம் - அமைப்பாளர் கலிய மூர்த்தி

## பெரியார் இயக்கம் சந்தித்த அடக்குமுறைகள் ( 8 )

# வைக்கம் போராட்டம்: கால் விலங்குகளுடன் சிறையில் வேலை செய்தார் பெரியார்

*22.9.2018 அன்று பெரம்பூரில் வடசென்னை மாவட்டக் கழகம் நடத்திய கருத்தரங்கில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் 'பெரியார் இயக்கம் சந்தித்த அடக்குமுறைகள்' என்ற தலைப்பில் நிகழ்த்திய உரையிலிருந்து.* (கடந்த இதழில் வெளியான பெரியார் உரையின் தொடர்ச்சி.)

ஈரோட்டிலே நான் தேவஸ்தானக் கமிட்டித் தலைவனாக இருந்த போது, நான் ஊரில் இல்லாத ஒரு நாளில் தோழர்கள் பொன்னம்பலமும், குருசாமியும், இப்போது காங்கிரசுக்காரர்களாக இருக்கும் ஈசுவரனும், எங்கள் ஆபிசிலே வேலை செய்கிற இரு ஆதி திராவிடரை விபூதிப் பூசச் சொல்லிப் பூசி, கோயில் உள்ளே அழைத்துச் சென்றவுடன் பக்தர்களெல்லாரும் சத்தம் போட்டுக் கோயிலுக்குள் இவர்கள் உள்ளே சென்ற தும், அவர்களை உள்ளே விட்டு வெளிக் கதவுகளைப் பூட்டி விட்டார்கள். அது குறித்து வழக்கும் போட்டார்கள்! சாமி தீட்டாய் போச்சு என்று வாதாடி தண்டிக்கச் செய்தார்கள்! பிறகு ஹைக்கோர்ட்டிலே அதற்கு எதிராகத் தீர்ப்புக் கிடைத்தது.

ஆனால், இந்தியாவிலேயே முதன்முதலில் சுசீந்திரம் கோயிலில்தான் கோயில் நுழைவுக்கென்று கிளர்ச்சி தொடங்கப்பட்டது. அந்தக் காலத்திலே கோட்டயத்திலே என் தலைமையில் ஒரு சுயமரியாதை மகாநாடு போட்டார்கள். அதில் சாதி ஒழிப்பு சம்பந்தமாகவும், கோயில் நுழைவு உரிமை சம்பந்தமாகவும் பலவிதத் தீர்மானங்களையும் போட்டார்கள்.


அடுத்து, எர்ணாகுளத்தில் ஒரு மாநாடு என் தலைமையில் கூட்டப்பட்டது. அதில் ஜாதி ஒழிப்புக்காக ஜாதியில்லாத மதமாகிய இஸ்லாம் மதத்தில் இந்துக்கள் சேர்ந்து விடுவது என்று தீர்மானம் நிறைவேற்றிக் கொண்டு வரப்பட்டது. சில செல்வாக்குக்கு உட்பட்டவர்கள் கிருஸ்தவ மதத்தில் சேருவது என்று திருத்தம் கொண்டு வந்தார்கள். மாஜி மந்திரி அய்யப்பன் அவர்கள் இஸ்லாம் மதத்திற்குப் போய் சேருவது என்பதை விருப்பப்பட்ட மதத்தில் சேர்ந்து கொள்ளலாம் என்று திருத்திப் போட வேண்டுமென்று சொல்லி ஏகமனதாய் நிறைவேறச் செய்தார்.

இஸ்லாத்தில் சேருவது என்ற தீர்மானம் வந்த அன்றைக்கே அய்ம்பது பேர்களாவது முஸ்லிமாகி விட்டார்கள். பிறகு வெளியிலும் பலர் மதம் மாறி விட்டார்கள். இது ஒரு பெரிய கலக்கு கலக்கிவிட்டது.

இப்படி முஸ்லிமான ஓர் ஆள் (அவர் புலையர் வகுப்பைச் சேர்ந்தவர்) ஆலப்புழையில் ஒரு நாயர் கடையில் கடை மீது ஏறிச் சாமான் கேட்டார் என்பதை வைத்துக் கொண்டு (கடைக்கார நாயர்) ஓங்கி அடித்தான்! அவர் சத்தம் போடவே நாயர்களும் ஓடி வந்தார்கள். சாயபுக்களும் ஓடி வந்து பலமான அடிதடி சண்டை நடந்தது. ஒருவர் செத்து விட்டார். இந்த மாதிரி இந்து-முஸ்லிம் கலவரம் வலுத்தவுடன் மேலே எல்லாம் தந்தி கொடுத்தார்கள். அப்போது திவானாக இருந்த சர் சி.பி. இராமசாமி அய்யர் இதை இந்து-முஸ்லிம் சச்சரவு என்று சொல்லிக் கொள்ளாமல், முதலாளி - தொழிலாளி சண்டை என்று சொல்லி அடக்கிவிட்டார்கள்.

பிறகு, மன்னருக்கு சி.பி. இராமசாமி, ஈழவர் புலையர்களெல்லோரும் துலுக்கராக மாறிக் கொண்டிருக்கிறார்கள்; இதற்கு மருந்து கோயிலைத் திறந்து விட்டுவிட வேண்டியதுதான் என்று மனு போட்டார்கள். அப்போது ஆயுசு ஓமம் நடந்து கொண்டிருக்கிறது. ராஜாவும் இதைக் கேட்டு ஒப்புக் கொண்டு பிறந்த நாளுக்கு ஏதாவது நல்ல சேதி ஆண்டுதோறும் சொல்லுவதில் இந்த ஆண்டு ராஜா பிறந்த நாள் செய்தியாக கோயில் எல்லா இந்துக்களுக்கும் திறந்து விடப்படும் என்று அறிவித்தார். இப்படித்தான் அங்கு ஆலயப்பிரவேச உரிமை கிடைத்தது.

இதற்கப்புறம்தான் ஆச்சாரியார் முழங்கினார். அதற்குப் பிறகு தான் காந்தியாரும் மற்றவர்களும் மாறினார்கள். இந்தக் காரியம் எல்லாம் காந்தியால் தான் நடந்தன என்பதெல்லாம் வெறும் பித்தலாட்டமாகும். காந்தி தீண்டாதார் என்ற மக்களுக்கும், ஆதி திராவிட மக்களுக்கும் ஒடிந்த ஊசியளவுக்குக்கூட அவர்களது இழிவு நீங்கப் பாடுபடவில்லை என்று டாக்டர் அம்பேத்கர் எழுதி யுள்ளார். காங்கிரசும் காந்தியும் தீண்டாதவர்களுக்கச் செய்தது என்ன? (What Congress and Gandhi have done to untouchable) என்னும் புத்தகத்தைப் பார்த்தால் தெரியும்.



வைக்கம் போராட்டம் குறித்து பெரியாரே விளக்கிய வரலாற்று உரை இது. இந்த உரையில் பெரியார் சிறையில் தான் சந்தித்த அடக்குமுறைகள் குறித்து எதையும் பதிவு செய்யவில்லை. அடக்குமுறைகளை எப்போதுமே வரவேற்கக் கூடிய தலைவர் பெரியார். அதன் வழியாக தனது கொள்கைகள் பரவும் என்ற உறுதியான பார்வை அவரிடம் இருந்தது. 'சுயவலி'களை சுயமரியாதைக்கான போராட்டத்தின் அடித்தளமாக்கியதே அவரது தனித்துவம். திரு.வி.க. தனது வாழ்க்கைக் குறிப்புகளில் வைக்கம் போராட்டம் குறித்து பெருமையுடன் பதிவு செய்கிறார். வைக்கம் வீரர் என்ற பட்டத்தை பெரியாருக்கு சூட்டியதும் திரு.வி.க. தான்.

வைக்கத்தில் போராட்டத்தைத் தொடங்கிய முன்னணி தலைவர்களில் ஒருவர் கேசவமேனன். போராட்டம் தொடங்கிய முதல்நாளான 30.3.1924 அன்று தடை செய்யப்பட்ட வீதிகள் வழியாக போராட்டக்காரர்களுக்கு தலைமையேற்று வழி நடத்திச் சென்ற மூன்று தலைவர்களில் கே.பி. கேசவமேனனும் ஒருவர். டி.கே. மாதவன், கேளப்ப நாயனார் ஆகியோர் மற்ற இரண்டு தலைவர்கள். கேசவ மேனன் மலையாளத்தில் எழுதிய தனது சுயசரிதையில் பெரியார் வைக்கம் போராட்டத்தில் திருவனந்தபுரம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த போது எத்தகைய அடக்குமுறைகளைச் சந்தித்தார் என்பதை இவ்வாறு பதிவு செய்கிறார்:

> "With fetters on his legs, a convitc's cap on his head, a loin cloth reaching down his knee and a wooden number plate around his neck, E.V. Ramaswamy is working with muderers and dacoits. He is doing double the work that is generally done by a convict. This sacrifice of a caste Hindu for the freedom of the untouchbles of Kerala gave us new life. The noble mission of this great movement has prompted him to sacrifice his all.
>
> Is there not anybody here with the maturity, magnanmity, experience, enthusiasm and patriotism that E.V.R. has? Are they not ashamed of themselves when they see this grat leader who has come to suffer for the sake of the people of this state? Is it not time for the elderly and experienced people of Kerala to rise from their easy chairs?"

*கால்களில் விலங்குச் சங்கிலி, தலையிலே கைதிகள் அணியும் ஒரு குல்லாய், முழங்காலுக்குக் கீழே தொங்குகின்ற ஒரு வேட்டி, கழுத்தில் கைதி எண் குறிக்கப்பட்ட ஒரு மரப்பட்டை. இவற்றோடு ஈ.வெ.ராமசாமி கொலைக்காரர்களோடும், கொள்ளைக்காரர்களோடும் வேலை செய்து கொண்டிருக்கின்றார். தண்டனை அடைந்த ஒரு சாதாரணக் கைதி எவ்வளவு ஒரு நாளைக்கு வேலை செய்வானோ, அதுபோல் இருமடங்கு வேலை செய்கிறார்.*

*ஒரு 'சாதி இந்து' என்று சொல்லக்கூடிய நிலையிலே உள்ள ஒருவர் கேரளத்திலுள்ள தீண்டத்தகாத மக்களுக்கு உரிமை வாங்கிக் கொடுப்பதற்காக செய்த தியாகம் நமக்கு புதுவாழ்வு தந்திருக்கிறது. இந்தப் பெரிய உன்னத இலட்சியத்திற்காக அவர் அனைத்தையும் இழக்கத் தயாராக இருக்கிறார்.*

*ஈ.வெ.ரா. அவர்களுக்கு இருக்கக்கூடிய நாட்டுப் பற்று, உற்சாகம், அனுபவம், பெருந்தன்மை, பெரும் பக்குவம் இவைகளெல்லாம் உடைய இன்னொருவரை இந்த நாட்டிலே அந்த அளவுக்குக் காண முடியுமா? இந்த மாநிலத்து மக்கள் அனுபவிக்கிற கொடுமையை நீக்க வேண்டும் என்பதற்காகத் தாம் எவ்வளவு கஷ்ட நஷ்டங்களை வேண்டுமானாலும் ஏற்கலாம் என்று சொல்லி ஒரு தலைவர் வந்தாரே - அதைப் பார்த்து இந்த மாநில மக்களாக இருக்கிற யாருக்குமே வெட்கமேற்படவில்லையா? கேரளத்தின் முதிர்ந்த அனுபவ மிக்க தலைவர்கள் தங்கள் சாய்வு நாற்காலியைத் தூக்கியெறிந்துவிட்டு தங்கள் பங்கைச் செலுத்த இப்போதாவது வர வேண்டாமா?"*

– கே.பி. கேசவமேனன்
தன் வரலாறு

பெரியார் வைக்கத்தில் போராடியது தீண்டப்படாத மக்களுக்காக அல்ல என்றும், 'ஈழவர்' என்ற பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத்தான் பேராடினார் என்றும் பெரியார் எதிர்ப்பாளர்கள் உள்நோக்கத்தோடு குற்றச்சாட்டுகளை சுமத்தினார்கள். தீண்டமைக்கு உள்ளாகிற எந்த ஜாதியினராக இருந்தாலும் அவர்கள் 'தீண்டப்படாதவர்கள்' என்ற அடிப்படை உண்மையை மறைத்துவிட்டு அது 'ஈழவர்களுக்கான தீண்டாமை' என்று தீண்டாமைக்குள் 'ஜாதிய ஆய்வு' நடத்தியவர்களுக்கு கே.பி. கேசவமேனன் எழுதியுள்ள இந்த வரிகளே சரியான பதிலடியைத் தருகிறது.

பெரியார் தான்அனுபவித்த இந்த அடக்குமுறைகளைப் பற்றி எதையும் வெளிப்படுத்திக் கொள்ளாத நிலையில் கேசவமேனன் வழியாகவே நாம் இதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

**(தொடரும்)**

## மதவெறியர்களால் மிரட்டப்பட்ட ஓவியர் முகிலனுக்கு பாராட்டு விழா

இலயோலா கல்லூரி வீதி திருவிழவில் இந்துத்துவப் பாசிசத்தைப் படம் பிடிக்கும் முகிலனின் ஓவியக் கண்காட்சி இடம் பெற்றிருந்தது. இதில் இடம் பெற்றிருந்த சில படங்கள் இந்துக்களைப் புண்படுத்துவதாக பா.ஜ.க. தலைவர் தமிழிசை உள்ளிட்ட இந்துத்துவ சக்திகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து ஓவியர் முகிலனை மிரட்டினர். இதைத் தொடர்ந்து ஓவியர் முகிலனுக்கு திராவிடர் விடுதலைக் கழக சார்பில் 01.02.2019 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு ஓவியர் முகிலனுக்கு தென்சென்னை மாவட்டத் தலைவர் மா.வேழவேந்தன் தலைமையில் கழகத் தலைமை அலுவலகத்தில் பாராட்டு விழா நடைபெற்றது.



ஓவியர் முகிலனுக்கு கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் சால்வை அணிவித்து பெரியார் சிலை மற்றும் புத்தகம் வழங்கிப் பாராட்டினார். தொடர்ந்து கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் மற்றும் மனிதி அமைப்பைச் சார்ந்த செல்வி ஆகியோர் முகிலன் அவர்களின் ஓவியங்கள் குறித்தும் இந்துப் பார்ப்பனியப் புரட்டு வாதங்களையும் அம்பலப்படுத்தி உரையாற்றினர். நிகழ்வை பெரியார் யுவராஜ் ஒருங்கிணைத்தார்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# திருப்பூர் தொழில் துறையை சீரழித்த மோடிக்கு கறுப்புக் கொடி




திருப்பூரில் பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு சார்பில் ஜனவரி 10, 2019 அன்று திருப்பூர் இரயில் நிலையம் பெரியார்-அண்ணா சிலை அருகே மோடிக்கு கருப்புக் கொடி காட்ட வந்த தோழர்கள் கைது செய்யப்பட்டார்கள். 'ஜி.எஸ்.டி. வரி விதிப்புக் கொள்கையால் திருப்பூரில் சிறு, குறு தொழில்களுக்கு மூடு விழா நடத்திய மோடியே திரும்பிப் போ' என்று முழக்கமிட்டனர். த.பெ.தி.க. பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தலைமை தாங்கினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட திருப்பூர், மேட்டூர், ஈரோடு, நாமக்கல்பகுதிகளிலிருந்து கழகத் தோழர்கள் பங்கேற்றனர். கூட்டமைப்பு சார்பில் 330 தோழர்கள் கைது செய்யப்பட்டு இரவு விடுதலை செய்யப்பட்டனர்.

# பாரி சிவா –ஜெயந்தி ஜாதி மறுப்பு மணவிழா



தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் பாரி சிவா எனும் சிவக்குமார் - ஜெயந்தி (கழகத் தோழர் முழக்கம் உமாபதியின் சகோதரி) ஜாதி மறுப்பு மணவிழா ஜனவரி 27ஆம் தேதி பெண்ணாடம் வள்ளலார் மண்டபத்தில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் நடந்தது. இயக்குனர் கவுதமன் வாழ்த்துரை வழங்கினார். கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, தலைமைக் கழகச் செயலாளர் தபசி குமரன், பரப்புரைச் செயலாளர் பிரபாகரன், தலைமைக் குழு உறுப்பினர் உமாபதி, இளையராஜா, சூலூர் பன்னீர் செல்வம் மற்றும் தலைமைக் கழகப் பொறுப்பாளர்களும், தமிழகம் முழுதுமிருந்தும் கழகத் தோழர்களும் ஏராளமாகத் திரண்டு வந்திருந்தனர்.

சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் தனிப் பேருந்தில் மணவிழாவுக்கு வந்திருந்தனர். மணமக்கள் வரவேற்பு சென்னை இராஜா அண்ணாமலைபுரம் சமூக நலக் கூடத்தில் பிப்ரவரி 3ஆம் தேதி மாலை சிறப்புடன் நிகழ்ந்தது. கழகத் தோழர்கள் உறவினர்கள் ஏராளமாகத் திரண்டு வந்திருந்தனர். மணவிழா மகிழ்வாக கழக வளர்ச்சி நிதிக்கு மணமக்கள் சார்பில் ரூ.2000 நன்கொடை வழங்கப்பட்டது.

## எம்.எஸ். சுப்புலட்சுமி யார்?

'புரட்சிப் பெரியார் முழக்கம்' 31.1.2019 இதழில் "பார்ப்பனர்களுக்கே பாரத ரத்னா குத்தகையா?" என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட பட்டியலில் எம்.எஸ். சுப்புலட்சுமி பெயர் குறிப்பிடப்பட்டு, அவர் குறித்த விவரம் கிடைக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எம்.எஸ். சுப்புலட்சுமி, தேவதாசி சமூகத்தில் பிறந்து, கல்கி சதாசிவம் என்ற பார்ப்பனரைத் திருமணம் செய்து கொண்டு, பார்ப்பனியக் கலாச்சாரத்தையே தனது அடையாளமாக்கிக் கொண்டவர். அதன் காரணமாகத்தான் ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்த அவருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

7 பேரையும் விடுதலை செய்தேயாக வேண்டும். தர்மபுரி பேருந்து வழக்கில் குற்றம்சாட்டப்பட்டிருந்த 3 பேர் விடுதலை இந்த வழியில்தான் சாத்தியமானது.

தமிழக ஆளுநரே! குறைந்தபட்சம் மனுவை யாவது நிராகரித்து திருப்பி அனுப்புங்கள். கிடப்பில்தான் போடுவேன் என்றால் தமிழகத்தை விட்டு திரும்பிப் போ என்று ஆளுநரை எதிர்த்துப் போராடும் நிலைதான் உருவாகும். தமிழக அரசு என்ன செய்யப் போகிறது? திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி, கழகத் தோழர்களுடன் ஜனவரி 14, 2018 அன்று தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியை நேரில் சந்தித்து இது தொடர்பாக மூன்று கோரிக்கைகள் அடங்கிய மனுவை நேரில் அளித்தார். ஒன்று - தமிழக ஆளுநர் 7 பேர் விடுதலைக்கு ஒப்புதல் தர வேண்டும் என்று முதல்வர் வெளிப்படையாக அறிக்கை வெளியிட வேண்டும்; இரண்டு - அனைத்துக் கட்சிக் கூட்டத்தை தமிழக முதல்வர் கூட்டி, 7 பேர் விடுதலையை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றலாம்; மூன்றாவது - தமிழக சட்டமன்றத்தைக் கூட்டி இதை ஒற்றைத் தீர்மானமாக நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பலாம். தமிழக முதல்வர் இதைப் பரிசீலிக்க வேண்டும் என்பதே கழகத்தின் கோரிக்கை என்று தனது உரையில் குறிப்பிட்டார், விடுதலை இராசேந்திரன்.

# திருப்பூர் மாஸ்கோ நகரில் தமிழ்ப் புத்தாண்டு–பொங்கல் விழா

திருப்பூரில் நடந்த பொங்கல் விழாவில் கழகப் பொருளாளர் துரைசாமி மற்றும் கழக பரப்புரை செயலாளர் பால் பிரபாகரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

27.01.2019 ஞாயிறு அன்று காலை 8.00 மணி முதல் மாலை வரை சிறுவர் சிறுமிகளுக்கான விளையாட்டு போட்டி பெரியார் திடல், மாஸ்கோ நகரில் நடைபெற்றது

காலையில் முதல் நிகழ்வாக பொங்கல் வழங்கி மாவட்ட தலைவர் முகில்ராசு தொடங்கி வைத்தார். மாவட்ட செயலாளர் நீதிராசன், மாவட்ட அமைப்பாளர் அகிலன் மற்றும் மாநகர செயலாளர் மாதவன் விளையாட்டுப் போட்டிகளை திறம்பட நடத்தினர்

மாலை 'விரட்டு'' கலைக் குழுவினரின் கிராமிய கலை நிகழ்ச்சிகள் 3 மணி நேரம் நடை பெற்றது. பகுத்தறிவு கருத்துகளை எளிய முறையில் நாடக வடிவில் மக்களிடம் பரப்பினர். நிகழ்வில் பறையாட்டம், ஒயிலாட்டம், மயில் காளை ஆட்டம், மான்கொம்பு ஆட்டம், பாடல்கள் மற்றும் பல்வேறு கலைநிகழ்ச்சிகளை மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் கண்டுகளித்தனர்

# தேன்மொழி – மணிகண்டன் ஜாதி–சடங்கு மறுப்பு மணவிழா



கழகத்தின் மாவட்ட செயலாளர் மேட்டூர் கி.கோவிந்தராஜ்-மு.கீதா இணையரின் மகள் கீ.கோ. தேன்மொழி - திருப்பூர் நா. பரமசிவம்-ப. மாலதி ஆகியோரின் மகன் கழகத் தோழர் ப. மணிகண்டன் ஆகியோர் ஜாதி-சடங்கு மறுப்பு மண விழா ஜன. 3, 2019 பகல் 11 மணியளவில் மேட்டூர் அணை அரசப்பா திருமண மண்டபத்தில் சிறப்புடன் நடந்தது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி மணவிழாவை நடத்தி வைத்தார். மாவட்ட கழகத் தலைவர் ப.கு. சூரிய குமார் வரவேற்புரையாற்றினார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், மேனாள் சட்டமன்ற உறுப்பினர் அ. தமிழரசு, காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு) நா. முனியன் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவினர் இசை நிகழ்ச்சியும் பறை இசையும் நடைபெற்றது. தமிழ்நாடு முழுதுமிருந்தும் கழகத் தோழர்கள் மணவிழாவுக்கு வந்திருந்தனர். அனைவரும் 'தமிழின உரிமைக்கு எதிரி யார்?' நூல் பரிசாக வழங்கப்பட்டது.

## பொழிலனின் "தமிழ் தேசம்" நூல் வெளியீடு

சென்னை புத்தகக் கண்காட்சி 300 அரங்கில் பொழிலன் முன்னிலையில் (அருவி புத்தக உலகம்) கழகத் தலைவர் கொளத்தூர் மணி 'தமிழ் தேசம்" என்ற நூலை ஜனவரி 11ஆம் தேதி மாலை வெளியிட்டார்.




இந் நிகழ்வில் தமிழக வாழ்வுரிமை கட்சி நிறுவனர் வேல் முருகன், மே 17 இயக்க தலைமை ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி, தமிழர் விடியல் கட்சி டைசன் மற்றும் பெரியார் உணர்வாளர்கள் கூட்டமைப்பை சார்ந்த தோழர்கள் கலந்து கொண்டனர்.

பிறகு அரங்கு 222 (பொதுமை பதிப்பகத்தில்) வேல் முருகன் நூலை வெளியிட கழகத் தலைவர் கொளத்தூர் மணி பெற்று கொண்டு உரையாற்றினார்கள்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 15th Feburary 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN